# தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல்கள் வழங்குவதனை நிராகரித்தல்

தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விலக்களிக்கப்பட்ட (வழங்க முடியாத) தகவல்கள்களாக இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்காக பிரிவுகளால் முன்வைக்கப்பட்டுள்ள தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

- அலுவலர்களின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் தகவல்கள் (தேசிய அடையாள அட்டை, கடவுச் சீட்டு போன்ற) மற்றும் தனிப்பட்ட தகவல்கள்.
- வங்கிக் கணக்குகள் பற்றிய தகவல்கள்
- சம்பளம் பற்றிய தகவல்கள்
- சொத்துக்கள், பொறுப்புக்கள் பற்றிய விபரங்கள்
- சட்ட மா அதிபர் அல்லது அவரது அலுவலர்கள் அல்லது தொழில் வல்லுனர்கள் ஆகியோர் பொது அதிகார நிறுவனமொன்றுடன் தொடர்பாடப்பட்ட தகவல்கள்
- குற்றத்தை தடுத்தல், குற்றவாளிகளை கைது செய்தல் அல்லது வழக்குத் தாக்கல் செய்வதற்கு பாதிப்பை ஏற்படுத்தும் தகவல்கள்
- மூன்றாம் தரப்பினரால் இரகசியமாக வழங்கப்பட்டுள்ள மற்றும் வெளிப்படுத்துவதற்காக அத் தரப்பினரால் அனுமதி வழங்கப்படாத தகவல்கள்
- நீதிமன்றத்தை அவமதிக்கும் அல்லது நீதிமன்ற அதிகாரத்திற்கு அழுத்தத்தை ஏற்படுத்தும் தகவல்கள்
- பாராளுமன்றம் அல்லது மாகாண சபை சிறப்புரிமைகள் மீறப்படும் வகையிலான தகவல்கள்
- தீர்மானமொன்று எடுக்கப்படாத அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் பற்றிய தகவல்கள்
- தேர்தல் சட்டங்கள் ஊடாக இரகசியமாகப் பேணப்பட வேண்டுமென குறித்துரைக்கப்பட்டுள்ள தகவல்கள்
- அமைச்சரவையினால் தீர்மானம் வழங்கப்படாத அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் பற்றிய தகவல்கள்
- மாகாண சபை உறுப்பினர்களுக்கு தனிப்பட்ட வகையில் வரிச் சலுகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரங்கள் தொடர்பான தகவல்கள் (வெளி நபர்களுக்கு)
- 22/99 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் கீழ் ஓய்வுபெற்ற அலுவர்களுக்கு வரிச் சலுகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரங்கள் தொடர்பான தகவல்கள் (வெளி நபர்களுக்கு)
- எவரேனுமொரு நபர் அல்லது விடயமொன்று சம்பந்தமாக இரகசியம் பாதுகாக்கப்படும் வகையில் அவதானிப்பு அல்லது விசாரணை மட்டத்தில் நிலவும் தகவல்கள்
- மாகாண சபைகளுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் உள்ளகக் கலந்துரையாடல் குறிப்புக்கள் மற்றும் உள்ளகக் குழுக் கூட்டங்கள்
- காணி சுவீகரிப்புக்கள் தொடர்பான எதிப்புக்கள் தொடர்பான விசாரணை அறிக்கைகள் சம்பந்தமான தகவல்கள்
- சேவைப் பிரமாணங்கள் அல்லது ஆட்சேர்ப்பு நடைமுறைகள் சம்பந்தமான இறுதித் தீர்மானமொன்று எடுக்கப்படாத சந்தர்ப்பங்களின்போது அதனுடன் தொடர்பான அவதானிப்புக்கள் மற்றும் முடிவுகளுடன் தொடர்பான தகவல்கள்
- ஏதேனுமொரு பெறுகை அலுவலுடன் தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தின்போது அது சம்பந்தமான தகவல்கள்
- எவரேனுமொரு விலை மனுதாரரால் (விலை அளவுகளை முன்வைத்தவர்) கோரப்படும் மற்றுமொரு விலை மனுதாரரால் முன்வைக்கப்பட்டிருக்கும் தகவல்கள்

- இறுதித் தீர்மானமொன்று எடுக்கப்படாத பதவி வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்புக்களுடன் தொடர்பான நேர்முகப் பரீட்சைகள் பற்றிய தகவல்கள்
- சலுகை அடிப்படையில் அலுவலர்களுக்கு வழங்கப்படும் வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரங்கள் தொடர்பான தகவல்கள்
- கழிவு முகாமைத்துவத்தை முறைப்படுத்துவதற்காக வழங்கப்படும் இயந்திர சாதனங்கள் மற்றும் அவற்றின் பாகங்களின் செயற்பாடுகளுடன் தொடர்பான இரகசியத்தைப் பாதுகாக்க வேண்டிய தகவல்கள்
- ஏனைய நிறுவனங்கள் அல்லது நபர்களால் எமக்கு வழங்கப்படும் விசேட அறிக்கைகள் பற்றிய தகவல்களை ஏற்புடைய தரப்பினரின் இணக்கப்பாடின்றி வழங்க முடியாது (JIKA/KOICA)
- கழிவு எதிர்விளைவுகளின் கூட்டு சம்பந்தமான தகவல்கள்